மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தை, ஏற்கெனவே இருந்த அரசாங்கம், தனித் தனிப் பல்கலைக்கழகங்களாகப் பிரித்து, அதற்குப் போதுமான கட்டமைப்புகளை உருவாக்காத குறைபாடு இருப்பதை மறுப்பதற்கில்லை. சொல்லப்போனால், திருநெல்வேலியிலே, ஒரு சூப்பர் மார்க்கெட்டிலேதான் அந்தப் பல்கலைக்கழகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை மாற்றி, இப்போது மீண்டும் ஒருங்கிணைந்த பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான சட்டமுன்வடிவை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இன்றைக்கு உறுப்புக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் எனச் சற்றேறக்குறைய 500-க்கும் மேலே போய்விட்ட சூழ்நிலையில், அனைத்தையும் ஒருங்கிணைந்த பல்கலைக்கழகமாகக்கொண்டு நிருவகிப்பதிலே சிரமங்கள் இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நாங்கள் கருதுகிறோம்.

மேலும், கல்வி தொடர்பான இதுபோன்ற பிரச்சினைகளில் மாற்றங்கள் தேவைதான். அந்த மாற்றங்கள் உரிய பரிசீலனைக்குப் பிறகு செய்வது முறையாக இருக்கும். அது எதிர்காலத்திலே மாணவர்களுடைய கல்விக்கும், ஆராய்ச்சியாளர்களுடைய வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும் என்கின்ற காரணத்தினால், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றாமல், பொறுக்குக் குழுவின் ஆய்விற்கு விட்டு, ஒரு நல்ல பரிசீலனைக்குப் பிறகு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றலாம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி வளர்ச்சியிலே பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும், மாணவர்களுக்கு தரமான கல்வியை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான், மத்தியிலே Knowledge Committee என்ற ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு,

அதன்மூலமாகப் பல்கலைக்கழகங்கள் அதிக அளவிலே உருவாக்கப்படவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருந்தார்கள்.

அந்த அடிப்படையில், சென்னையில் இருக்கக்கூடிய அண்ணா பல்கலைக்கழகம் என்பது, 240-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளைச் சேர்த்தால், 500-க்கும் மேற்பட்ட கல்லூரிகளை ஒன்றிணைத்து, மேலாண்மை செய்வதிலே மிகுந்த சிரமம் இருக்கின்ற அடிப்படையில்தான், பல பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இன்றைக்கு ஒரே பெயர் வைப்பது என்பது குழப்பமான நிலை என்று சொன்னால், குழப்பமான நிலைதான். அதைப் போக்க, இன்றைக்குப் பெயர்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாமே தவிர, பல்கலைக்கழகங்களை இணைப்பது என்பது இந்தப் பெரும் எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகளை மேலாண்மை செய்வதிலே மிகப் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்படும். அதோடுமட்டுமல்லாமல், இந்தச் சட்டம் இயற்றுகின்ற அறிக்கையிலே சொன்னதுபோல, ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு பாடத் திட்டத்தை பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஏற்கெனவே செயல்பாட்டில் பாடத் திட்டங்கள் இருக்கின்ற நேரத்தில், மீண்டும் இணைத்து ஒரே பாடத் திட்டமாக மாற்றுவதிலும், மாணவர்களுக்கிடையிலே கல்வியிலே பல குழப்பங்களை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படும். எனவே, நமது அரசு இதை மறுபரிசீலனை செய்து, தேவை என்று சொன்னால், இதை நிலைக் குழுவிற்கு அனுப்பி, பரிசீலனை செய்யலாம் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வேண்டுகோளாக வைக்கின்றேன். இன்னும் சற்று நிலைக் குழுவிலே வைத்து ஆய்வுகளை மேற்கொண்டு, அதற்குமேல் முடிவுகளை எடுக்கலாமே தவிர, இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தை தயவுசெய்து நீங்கள் திரும்பப் பெறவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அடிப்படையிலே பல்வேறு பல்கலைக்கழகங்கள், சென்னைப் பல்கலைக்கழகம் இருக்கிறது, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இருக்கிறது, பாரதிதாசன் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம்

போன்ற பல்கலைக்கழகங்கள் இருக்கின்றபோது, ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட கல்லூரிகளை உள்ளடக்கி, ஒரே பல்கலைக்கழகமாக ஆக்கப்படுகின்ற வேளையில், அதை நிருவகிப்பது மிகப் பெரிய சிரமமாகவும், கஷ்டமாகவும் இருக்கும். இப்போது நடைமுறையிலே, ஒரே சீரான பாடத் திட்டம் இல்லையென்ற ஒரு குறைபாடு இருக்கக்கூடியதை நாம் உணர்கிறோம். இருந்தாலும்கூட, இதைவிடப் பெரிய சிக்கல்கள் வந்துவிடக்கூடாது. எனவே, அவசர அவசரமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, முறையாக ஆய்வு செய்து இதை நிறைவேற்றுவதுதான் சரியாக இருக்கும். எனவே, பொறுத்து செய்வது சரியாக இருக்கும் என்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 4-45

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, சென்னையில் அப்போது நான்கு கல்லூரிகள் இருந்தன. Guindy College of Engineering அதாவது கிண்டி பொறியியல் கல்லூரி, A.C. Tech, அழகப்பா பொறியியல் கல்லூரி, M.I.T., மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி, School of Architecture and Planning, கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் கல்லூரி போன்ற 4 கல்லூரிகளையும் இணைத்து பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பக் கல்லூரி என்று உருவாக்கினார். அதற்குப் பின்பு, அதிலே அந்த வார்த்தைகளை வெளிநாடுகளிலே செல்லுகிறபோது, அந்த வார்த்தை உச்சரிப்பிலே சில பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால், 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அதை அழகாகச் சொல்கிற வகையிலே, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை என்று கொண்டு வந்தார்.

அதற்குப் பின்பு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் தமிழகத்திலே அப்பொழுது இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்கள், அது கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி, அப்பொழுதெல்லாம் எங்கெங்கெல்லாம்

பல்கலைக்கழகங்கள் இருந்தனவோ அவை ஒன்றாக இருந்தன. அந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கு ஒரு மரியாதை வேண்டும், அவற்றிற்கு ஒரு சிறப்பு வேண்டுமென்ற அடிப்படையிலேதான், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பொறியியல் கல்லூரிகளைத் தனியாகப் பிரித்து, தமிழகத்திலே இருக்கக்கூடிய 237 பொறியியல் கல்லூரிகளை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைத்து, அதை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்து, ஒரு இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக உருவாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல; மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அதை உருவாக்குகிறபோது, அன்றைக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகம் என்று சொன்னால், அது உலகளவில் புகழ்பெற்று இருந்தது. பாரம்பரியமிக்க பல்கலைக்கழகமாக இன்றைக்குத் திகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆசிரியர்களின் திறமை, உள்கட்டமைப்பு வசதிகள், பாடத் திட்டங்கள், கற்பித்தல், கற்றல் முறைகள், பயிற்சி முறைகள், தேர்வு முறைகள், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் போன்றவையெல்லாம் உலகத்தரத்திற்கு ஒப்பிட்டிருந்தன. அதோடுமட்டுமல்ல; நூலக வசதிகள், ஆய்வு வசதிகள், நெறிமுறைகள், போன்றவையெல்லாம் நம்முடைய உள்நாட்டு மாணவர்களை மட்டுமல்ல; வெளிநாட்டு மாணவர்களையும் கவர்ந்து ஈர்த்தன. இதனால்தான், எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே U.G.C.-யின் NAAC அந்தஸ்துபெற்ற 5 பல்கலைக்கழகங்களில், சென்னை அண்ணாப் பல்கலைக்கழகமும் ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அற்புதத் திட்டத்தின் காரணமாக, பொருளாதார ரீதியில், மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு, உலகளவில் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தது. இப்பேர்ப்பட்ட புகழையும், பெருமையும் கொண்டிருந்த அண்ணா பல்கலைக்கழகத்தை சிதறடிக்கிற வகையிலே, 2006 ஆம் ஆண்டு இடையிலே ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதைக் கூறு போட்டு, தன்னுடைய குடும்ப நலனைப்